(3) மதுரைப் பெருநகரப் பெருந்திட்டம், (4) சென்னை பெருநகரப் பகுதியில் போக்குவரத்து ஆய்வு. இவ்வேலைத் திட்டங்கள் அடுத்த நிதி யாண்டிலும் தொடரப்பட்டு எவ்வளவு விரைவில் முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கப்படும். இத்தகைய பெருந்திட்டங்களைத் தீட்டுவதற்காக ஏற்படும் செலவை ஈடு செய்ய 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 11·66 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. மேற்சொன்ன பெருந்திட்டங்களன்றியும், நகரமைப்புத்துறை மாநிலத் திட்டத்தின்கீழ், தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்ட வட்டாரங்களுக்காக வட்டாரத் திட்டங்களையும், தெரிந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளுக்காக பொது விவர வளர்ச்சித் திட்டங்களையும், பெருந்திட்டங்களையும் தயாரிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இவ்வேலைகளைக் கவனிக்க, 1969–70-ம் ஆண்டு வரவு-செலவு மானியக் கோரிக்கையில் ரூபாய் 1·92 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

54. நகரமைப்பு வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும் திட்டம் ஒன்று உள்ளது. இதன்கீழ், பட்ட மேற் படிப்பிற்காகவும், தகுதிப் பட்டய மேற்படிப்பிற்காகவும் (Post Diploma) பயிற்சி பெற துறை யிலிருந்து பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது குறித்து 1969–70-ம் ஆண்டு செலவுக்காக ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

55. உள்ளாட்சி மன்றங்கள் நகரமைப்புத் திட்டங்களை நிறைவேற்று வதற்குக் கடன் வகையில் நிதி உதவி அளிப்பதற்காக 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 2·00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. அரசு தரும் உதவி மட்டுமன்றி, சீரான நிதி வசதி உடைய நகராட்சிகளும் தம்மிடமுள்ள நிதி வசதியை நகரமைப்பு வேலைகளுக்காக பயன்படுத்துகின்றன. நகராட்சிகள் நேரடியாக மேற் கொள்ளும் இச் செலவு மாநிலக் கணக்குகளில் காட்டப்படுவதில்லை.

56. இம் மானியக் கோரிக்கையை ஏற்குமாறு இம் மன்றத்தினை வேண்டுகிறேன்.

இணைப்பு—3.

கோரிக்கை 38-பொதுச் சுகாதார மூலதனச் செலவு.

இந்த மானியக் கோரிக்கையில் கீழ்க்கண்ட இனங்கள் அடங்கும் :—

				ரூ.
(i) a. பணிகள்	..	..	(—)	37,25,000
(ii) b. உதவி மானியங்கள்	..	..	(—)	1,26,200
(iii) c. ஏனைய பணிகள்	..	..		..
(iv) d. வளர்ச்சிப் பணித் திட்டங்கள்		..		51,800
(v) e. கழிக்கவும்—30. பொதுச் சுகாதாரத்திற்கு மாற்றப்பட்ட மூலதனச் செலவு.			(—)	5,200
மொத்தம்—பெருந்தலைப்பு		..	(—)	38,04,600
கூட்டுக-வசூல்-வாக்களிக்கப்பட்டது.				38,56,400
பெருமொத்தக் கோரிக்கை	..	..		51,800

1969 மார்ச் 21]

இனம் (i)—க. பணிகள்.—[(—) ரூ. 37,25,000]—

நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் நீர் வழங்கு திட்டங்களையும் கழிவு நீர் அகற்றல் திட்டங்களையும் விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, வெளிக்கடைகளில் எளிதில் கிடைக்காத குழாய் முதலிய பொருள்களைத் தேவையான அளவிற்கு அரசு வாங்கி, இருப்பில் வைத்து வருகின்றது. நீர் வழங்குதல், கழிவு நீர் அகற்றுதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் குழாய்கள், ஏனைய பொருள்கள் ஆகியவை குறித்த செலவு, சரிகட்டுதல் மூலம், சம்பந்தப்பட்ட வேலைத் திட்டங்களுக்குப் பற்றாக எழுதப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து வசூலிக்கப்படும். பொருள்கள் செலவாக ஆக, அவற்றிற்கு ஈடாகப் பொருள்கள் வாங்கி இருப்பு வைக்கப்படுகின்றது.

இனம் (ii)—b. உதவி மானியங்கள்.—[(—) ரூ. 1,26,200]—

சென்னை மாநகராட்சி நிறைவேற்றும் நீர்வழங்கு திட்டங்களுக்கும் கழிவுநீர் அகற்றல் திட்டங்களுக்கும் வழங்கப்பட்ட உதவி மானியங்கள் குறித்த செலவு, 1956-57, 1957-58-ம் ஆண்டுகளில் முதற்கண் மூலதனக் கணக்கிலிருந்து சரிக்கட்டப்பட்டது. இச் செலவுத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து 15 ஆண்டுகளில் வருமானக் கணக்கிற்கு மாற்றி எழுதப்படவேண்டுமென்று ஆணையிடப்பட்டது. இதற்கு நிகராக "30. பொதுச் சுகாதாரம்" என்பதன்கீழ் செலவு கூட்டப்பட்டுள்ளது.

இனம் (iii)—c. ஏனைய பணிகள்.—நிதி ஒதுக்க கருதப்படவில்லை.

இனம் (iv)—d. வளர்ச்சி வேலைத் திட்டங்கள்.—[ரூ. 51,800]—

கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதே கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.—(i) விசை ஏற்ற அமைப்பு இணைக்கப்பட்ட துணைக் கிணறுகள், (ii) மேந்தொட்டிகளும் (overhead tanks) விசை ஏற்ற அமைப்புகளும் கொண்ட மூடப்பட்ட கிணறுகள், (iii) நகராட்சிகளின் நீர் பெருங் குழாய்களிலிருந்து இணைப்புகள், (iv) இழு கிணறுகள் ஆகியவற்றின்மூலம் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும். பொதுவாக வேலைத் திட்டத்தின் செலவில் 25 சத வீதம், இவ் வேலைத் திட்டத்தினால் பயன்பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும். ஆனால், அரிசனங்கள், ஏழை மக்கள், பின்னிலை வகுப்பினர் ஆகியோர் பயன்படுத்தும் கிணறுகளுக்காக எவ்விதத் தொகையும் வசூலிக்கப்படுவதில்லை. முதலாவது, இரண்டாவது திட்டக் காலத்தில், 14,272 நீர் வழங்கு வேலைகள் நிறைவெய்தின. இவ் வேலைத் திட்டம், பின்னர் கிராமப் பணிகள் திட்டத்துடன் இணைக்கப் பட்டது.

கம்பம் பள்ளத்தாக்கு பஞ்சாயத்துக்களுக்கான நீர்வழங்கு (அடங்கல்) திட்டத்திற்கு 1955-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டம் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பெரியாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவது தவிர, மற்றெல்லாப் பணிகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஊராட்சிகள் இப் பணிக்காகும் செலவினைச் செய்வதற்காக, அந்த ஊராட்சிகளுக்கு மானிய உதவி அளிக்கும் பொருட்டு ரூ. 1,800 ஒதுக்கப்பட்டுள்ளது.

1966 டிசம்பர் திங்களில் நாங்குனேரி ஊராட்சிக்குக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ் வேலை நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காகும் செலவினைச் செய்வதற்காக, நாங்குனேரி ஊராட்சிக்கு மானிய உதவி வழங்குவதன் பொருட்டு ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இனம் (v)—௪. கழிக்கவும்—"30. பொதுச் சுகாதாரத்திற்கு" மாற்றப்பட்ட மூலதனச் செலவு.—[(—) ரூ. 5,200]—

கிராம நீர் வழங்கு (அடங்கல்) வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கு, அவற்றிலிருந்து பயன்பெறுபவர்களிடமிருந்து திட்டத்திற்காகும் செலவில் 25 சத வீதம் வசூலிக்கப்படும். எஞ்சிய தொகையாக ரூ 5,200 பயன்பெறுபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத் தொகையை மூலதனக் கணக்கிலிருந்து வருமானக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

இம் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. **51,800** ஒதுக்குமாறு இம் மன்றத்தை வேண்டுகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS